‘வாட்ஸ் அப்’பில் வலம் வருவது!

கலைஞர் பொன் மொழிகள்



அனைவரையும் உள்ளடக்கிய

நகர்ப்புற இயக்கத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மக்களவையில் எஸ்.ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 7- திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், ஆகஸ்ட் 6, அன்று மக்களவையில், நகர்ப்புறங்களில் போதிய நடைபாதை வசதிகள் இல்லாமை, பாதுகாப்பற்ற நடைபாதைகள், போக்குவரத்து நெரிசல், தனியார் வாகனங்களை அதிகம் சார்ந்திருக்கும் நிலை, நடைபயிற்சி மற்றும் பொது போக்குவரத்தை மையமாகக் கொண்ட நகர்ப்புற வளர்ச்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நகர்ப்புற இயக்கத்தை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் டோகன் சாஹு அவர்கள் அளித்த பதிலில், அரசியலமைப்பின் பன்னிரண்டாவது அட்டவணையின்படி நகரத் திட்டமிடல், சாலைகள், நடைபாதைகள் மற்றும் நகர்ப்புற போக்குவரத்து கட்டமைப்புகளை உருவாக்குதல் ஆகியவை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டு அதிகார அமைப்புகளின் பொறுப்பு என தெரிவித்தார். மாநில அரசுகள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முயற்சிகளுக்கு கொள்கைகள், வழிகாட்டுதல்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் மற்றும் நிதி உதவி மூலம் ஒன்றிய அரசு ஆதரவு அளித்து வருவதாகவும் கூறினார்.

நடைபாதை வசதிகள், மிதிவண்டி போக்குவரத்து, பொது போக்குவரத்து முன்னுரிமை மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற போக்குவரத்தை மேம்படுத்த நகர்ப்புற மற்றும் பிராந்திய மேம்பாட்டு திட்ட வடிவமைப்பு மற்றும் செயல்படுத்தல் வழிகாட்டுதல்கள், 2014, தேசிய நகர்ப்புற போக்குவரத்துக் கொள்கை, 2006 மற்றும் மெட்ரோ ரயில் கொள்கை, 2017 ஆகியவற்றை ஒன்றிய அரசு வெளியிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இவ்வழிகாட்டுதல்களில் நடைபாதைகள், மிதிவண்டிப் பாதைகள், பொது போக்குவரத்து அணுகல் மற்றும் கடைசி மைல் இணைப்பு ஆகிய வற்றுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அடல் நகர்ப்புற புத்துயிரூட்டல் மற்றும் மாற்றத்திற்கான இயக்கம் திட்டத்தின் கீழ், இதுவரை 431 கி.மீ. நடைபாதைகள்/நடப்புப் பாதைகள் மற்றும் 43 கி.மீ. தனிப்பட்ட மிதிவண்டிப் பாதைகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். மேலும், பிரதம மந்திரி மின்சார பேருந்து சேவைத் திட்டத்தின் கீழ், 100க்கும் மேற்பட்ட நகரங்களில் 10,000 மின்சார பேருந்துகள் இயக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாகவும், இது பொது போக்குவரத்து வசதியை மேம்படுத்தி, தனியார் வாகன சார்பை குறைத்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த நகர்ப்புற இயக்கத்தை ஊக்குவிக்கும் என்றும் தெரிவித்தார்.

மேலும், போக்குவரத்து மையப்படுத்தப்பட்ட நகர்ப்புற வளர்ச்சியை ஊக்குவிக்க, எட்டு மாநிலங்களில் 39 போக்குவரத்து மைய வளர்ச்சி வழித்தடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் அதிக அடர்த்தி கொண்ட வளர்ச்சி, சிறந்த கடைசி மைல் இணைப்பு மற்றும் ஒருங்கிணைந்த பொது போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும், ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை மாண்புமிகு இணை அமைச்சர் திரு. டோகன் சாஹு அவர்கள், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

பவானிசாகர் பிரச்சினையை மாநில அரசின் பக்கம் திருப்பிய ஒன்றிய அரசு!

ஈரோடு விவசாயிகளின் கவலைக்கு நேரடி பதில் இல்லை!

மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக.7- பவானிசாகர் பாசனப் பிரச்சினையில் பொறுப்பை மாநிலத்தின் மீது தள்ளிய ஒன்றிய அரசு; ஈரோடு விவசாயிகளின் கவலைக்கு நேரடி பதில் இல்லை என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே.இ.பிரகாஷ், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் மற்றும் அதனுடன் தொடர்புடைய கால்வாய் நவீனமயமாக்கல் பணிகள், குறிப்பாக ஈரோடு மாவட்டத்தின் பாசன நிலைமை மீது ஏற்படுத்தியுள்ள தாக்கம் குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்று கேள்வி எழுப்பினார்.

மேலும், பவானிசாகர் பாசனப் பகுதிகளில் கால்வாய் மேம்பாடு, பாசன உள்கட்டமைப்பு மற்றும் நீர் மேலாண்மை தொடர்பாக தமிழ்நாடு அரசிடமிருந்து எந்தவொரு முன்மொழிவோ அல்லது கோரிக்கையோ பெறப்பட்டுள்ளதா, காளிங்கராயன் கால்வாய் மற்றும் பிற பாசன அமைப்புகளைச் சார்ந்துள்ள விவசாயிகள் மீது நீர் திறப்பில் ஏற்பட்ட தாமதத்தின் தாக்கம் ஆய்வு செய்யப்பட்டுள்ளதா, மேலும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பாசன உள்கட்டமைப்பு பணிகளை விரைந்து நிறைவேற்றவும், நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்தவும் ஒன்றிய அரசு எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது என்பதையும் கேட்டார்.

ஜல் சக்தி அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு:-

(அ) முதல் (ஈ) வரை: நீர்வள மேலாண்மை மாநிலப் பட்டியலில் உள்ள பொருளாகும். எனவே, நீர்வளத் திட்டங்கள் மாநில அரசுகளின் முன்னுரிமை மற்றும் வளங்களின் அடிப்படையில் அவற்றால் திட்டமிடப்பட்டு, நிதியளிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு, பராமரிக்கப்படுகின்றன. அடையாளம் காணப்பட்ட திட்டங்களுக்கு தொழில்நுட்ப ஆதரவு மற்றும் பகுதி நிதி உதவி வழங்குவதே ஒன்றிய அரசின் பங்காகும்.

மத்திய நீர்வள ஆணையத்தின் (CWC) தொழில்நுட்ப பரிசீலனை மற்றும் அதன் பின்னர் நீர்வளங்கள், நதி மேம்பாடு மற்றும் கங்கைப் புத்துயிர்ப்பு துறையின் ஆலோசனைக் குழுவின் தொழில்நுட்ப பொருளாதார மதிப்பீடு ஆகியவை மத்திய நிதியுதவி கோரும் திட்டங்களுக்கு கட்டாய முன் நிபந்தனைகளாகும். பவானிசாகர் பாசனப் பகுதிக்கான கால்வாய் நவீனமயமாக்கல், பாசன உள்கட்டமைப்பு மேம்பாடு அல்லது நீர் மேலாண்மை தொடர்பாக மதிப்பீட்டிற்காக மத்திய நீர்வள ஆணையத்திற்கு எந்த முன்மொழிவும் பெறப்படவில்லை.

தமிழ்நாடு அரசின் தகவலின்படி, கீழ்பவானி திட்டக் கால்வாய் அமைப்பு, கொடிவேரி அணைக்கட்டு பாசன அமைப்பு மற்றும் காளிங்கராயன் அணைக்கட்டு கால்வாய் அமைப்பின் நவீனமயமாக்கல் பணிகள் நபார்டு (NABARD) நிதியுதவியுடன் விரிவாக்கம், புதுப்பித்தல் மற்றும் நவீனமயமாக்கல் (ERM) திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பவானிசாகர் அணையின் பாசன நிலைமை மாநில அரசால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. பாசனப் பயன் அதிகபட்சமாக கிடைப்பதையும், நீர் சமமாகப் பகிரப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் நீர் திறப்பு திட்டமிடப்படுகிறது.

ஒன்றிய அரசு, ‘கட்டளைப் பகுதி மேம்பாடு மற்றும் நீர் மேலாண்மை நவீனமயமாக்கல் (MCAD)’ என்ற முன்னோடி திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் நிலத்தடியில் அழுத்தக் குழாய் அமைப்புகள் வழியாக நுண்ணீர்ப்பாசனத்திற்குத் தேவையான வலுவான உள்கட்டமைப்புடன் பாசன நீர் விநியோக வலையமைப்பை நவீனமயமாக்கும் நோக்கம் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் திருப்பூர் மாவட்டத்தில் 4,989 ஹெக்டேர் கட்டளைப் பயிரிடத் தக்க பரப்பளவை (CCA) கொண்ட ஒரு திட்டம் MCAD திட்டத்தின் கீழ் செயல்படுத்துவதற்காக சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

நுகர்பொருள் வாணிபக் கழக

நவீன அரிசி ஆலைகளை கூட்டுறவுத் துறைக்கு மாற்றிட முயற்சிப்பதை கைவிடக்கோரி ஆர்ப்பாட்டம்!

மயிலாடுதுறையில் தொ.மு.ச. பொருளாளர் கோ.சி.வள்ளுவன் பங்கேற்பு!

சென்னை, ஆக.7 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் துவங்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கி வரும் 21 நவீன அரிசி ஆலைகளையும், எருக்கூர் ஆலை வளாகத்தில் அமைந்துள்ள நவீன நெல் சேமிப்பு கலனையும் கூட்டுறவுத் துறைக்கு மாற்றிட நுகர்பொருள் வாணிபக் கழகமும், தமிழ்நாடு அரசும் முயற்சி செய்வதை கண்டித்தும், 12(3) ஒப்பந்தப்படி 1500க்கும் மேற்பட்ட காலிப் பணியிடங்களை கொள்முதல் பணியாளர்களைக் கொண்டு நிரப்பிட வலியுறுத்தியும், சுமை தூக்குவோர் கூலியை உயர்வு செய்வது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும் தமிழ்நாடு முழுதுமுள்ள மண்டல அலுவலகங்கள் முன்பாக தொ.மு.ச.வின் இணைப்பு சங்கமான எம்ப்ளாயீஸ் யூனியன் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் 05.08.2026 அன்று நடைபெற்றது.

மயிலாடுதுறையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு பொன்.நக்கீரன் தலைமை வகித்தார். ஆப்ரகாம் லூதர்கிங் அனைவரையும் வரவேற்றார். தொ.மு.ச. பேரவையின் பொருளாளரும் சங்கத்தின் மாநிலத் தலைவருமான கோ.சி.வள்ளுவன் கண்டன உரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் கவுன்சில் செயலாளர் எம்.வீரமணி, எம்.சேரன் செங்குட்டுவன், ந.சுந்தர், எம். தமிழழகன், எம். ஆனந்தராஜ், கே.வேல்முருகன், எம்.பாஸ்கர், எல்.பாலசுப்பிரமணியன், ஜெ.ஆளுசேகரன், எம். ராமன், ஜெ.அய்யப்பன், வி.ரவி, பி.செல்வராஜ் உள்ளிட்ட நிர்வாகிகளும், நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

பொருளாளர் வி.பக்கிரிசாமி நன்றி கூறினார்.

சென்னை தெற்கில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் கைதைக் கண்டித்து

போராட்டத்தில் ஈடுபட்டு படுகாயமடைந்த கழகத்தின் நிர்வாகிகள்!

மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் சந்தித்து நலம் விசாரிப்பு!

சென்னை,ஆக.7- தி.மு.கழகத்தின் இளைஞர்அணி செயலாளர் -எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்களை (4.8.2026) அன்று முகாந்திரமில்லாமல் கைது செய்யப்பட்டு சென்னையிலிருந்து தஞ்சாவூருக்கு அழைத்துச் சென்று அலைக்கழிக்கப்பட்டதைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் திரண்டு போராட்டங்களில் ஈடுபட்டனர். அதுபோது சென்னையில் நடைபெற்ற போராட்டத்தில் சென்னைத் தெற்கு மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த சைதை மேற்குப் பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் கொடி பாலாவையும், அதே போல் வீட்டிலிருந்த போது காலில் அடிபட்டு ஓய்வு எடுத்துவரும் சைதை கிழக்குப் பகுதி வட்டக் கழக செயலாளர் நேருநகர் எஸ்.பாட்சா ஆகியோர் இல்லங்களுக்கு நேரில் சென்று மாவட்ட கழக செயலாளர் மேனாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உடல்நலம் விசாரித்து அளவளாவினார். இந்நிகழ்வில் பகுதி செயலாளர் இரா.துரைராஜ், 168 அ வட்டக் கழக செயலாளர் - மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கழகத் தலைவர் தலைமையில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி

மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க.வினர் திரளாக பங்கேற்பீர்!

பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள்!

மாதவரம்,ஆக.7- முத்தமிழ் அறிஞர் ஐயா கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தலைமை கழக அறிவிப்பின்படி கழகத் தலைவர் மு. க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்ற அமைதிப் பேரணியில் மாதவரம் வடக்கு பகுதி திமுகவினர் திரளாக பங்கேற்க வேண்டும் என்று பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காஞ்சி தந்த தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் இதயத்தை இரவலாக பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று 7/8/2026 வெள்ளிக்கிழமை சரியாக காலை 8 மணிக்கு சென்னை அண்ணா சாலை ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலை அருகில் இருந்து அமைதி ஊர்வலம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது. இந்த அமைதி பேரணி முத்தமிழ் அறிஞர் கலைஞர் நினைவிடம் வரை சென்று அங்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் அவர்கள் மலரஞ்சலி செலுத்த உள்ளார்.

இந்நிகழ்வில் மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட மாவட்ட,பகுதி நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், வட்ட நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

ஆயிரம்விளக்கு எஸ்.ஏ.எம்.உசேன்

ஆகஸ்ட் 6 (2019)



தனது இளமைக் காலத்திலேயே, கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, தனது குடும்பத்தைப் பற்றிகூட கவலைப்படாமல் ஆயிரம்விளக்கு பகுதி கழகப் பணிகளில் முழுநேரம் ஈடுபட்டு வந்தவர்.

வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர், மாவட்டத் துணைச் செயலாளர், துணை அமைப்புச் செயலாளர், கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர், தலைமை நிலையச் செயலாளர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

நெருக்கடிநிலை காலத்தில் மிசா சட்டத்தின்படி இருமுறை கைது செய்யப்பட்டார். மேலும், கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகத்தின் சார்பில் 2013ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் “கலைஞர் விருது” வழங்கப்பட்டது.

“தி.மு.கழகத்தின் கையிலே கிடைத்த ஆயிரம்விளக்கின் அற்புத விளக்கு உசேன்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.